**அசல்வழக்கு எண். OS. 411/2021– PW1 .**

**திரு. வெங்கடாசலபதி த/பெ.வெங்கடராமையா**

**நாள்:02.11.2023**

**குறுக்கு விசாரணை :**

சத்தியமாகச் சொல்கிறேன். தாவா சொத்தை எனது அப்பாவும் அவரது சகோதரரும் சேர்ந்து கிரயம் பெற்றார்கள் என்றால் எனது அப்பா தான் வாங்கினார். தாவா சொத்து 1977 ல் கிரயம் பெறப்பட்டுள்ளது. தாவா சொத்து கிரயம் பெற்ற போது எனக்கு வயது 13 , 14 இருக்கும் என்றால் 15 வயது. 1977 தாவா சொத்து கிரயம் பெற்றப்பட்டது எனக்கு தெரியாது என்றால் தெரியும் எனது அப்பா சொன்னார். தாவா சொத்தை எனது அப்பாவும் அவரது சகோதரரும் சோந்து கிரயம் பெற்றுள்ளார்கள் என்றும் எனது அப்பா மூத்தவர் என்பதால் அவரது பெயரில் கிரய பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பா 1999 ல் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். எனது அப்பா 1997 ல் ஒரு உயில் எழுதி உள்ளார் என்றும் அது பற்றி எனக்கு தெரியும் என்றும் சொன்னால் இல்லை. உயில் பழுதியது பற்றி எனக்கும் மற்ற வாதிகளுக்கும் தெரியவந்தால் தான் 2021 வரை நாங்கள் எந்த பிரச்சனையும் செய்யாமல் இருந்தோம் என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டதால் பிரதிவாதிகளிடம் தகராறு செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வீட்டை தாவாவில் காட்டவில்லை என்றால் ஆமாம் வீடு முன்பே வாங்கி விட்டோம். வீட்டிற்கு கட்டிய ரசீதை நான் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் வீட்டை தாவா சொத்தில் குறிப்பிடவில்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் பிரதிவாதிகள் அவர்களது எதிர்வழக்கரையில் சொல்லி உள்ள விவரங்களை மறுக்கவில்லை என்றால் ஆமாம். கிரய ஆவணம் 834/1977 ல் கிரயம் பெறப்பட்ட சொத்து எனது அப்பாவும் அவரது சகோதரரும் சேர்ந்து கிரயம் பெற்ற சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அப்பாவுக்கும் எனது சித்தப்பாவிற்கும் பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தில் பிரதிவதிகளுக்கு சமபாகம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து கிரயம் பெற்ற போது எனக்கு

13 வயது என்றும் தாவா சொத்தை எனது அப்பாவும் சிததப்பாவும் கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் நானும் எனது அப்பாவும் தான் போய் சொத்து கிரயம் வாங்கினோம் எனது சித்தப்பா வரவில்லை. எனது அப்பாவும் எனது சித்தப்பாவும் பாதி பாதி தொகை கொடுத்து தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளார்கள் என்றும் அதனால் தாவா சொத்தில் பாதி பாகம் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா தாவா சொத்து தானும் தனது சகோதரரும் சேர்ந்து வாங்கியதாக என்னிடம் எனது அப்பா நான் வளர்ந்த பின்பு சொல்லி உள்ளார் என்றால் இல்லை. நாங்கள் வளர்ந்த பின்பு எனது அப்பா எங்கள் குடும்ப தேவைக்காக அவரது பாதி பங்கை அவரது தம்பிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது தவறு. எனது சித்தப்பா சொத்து கிரயம் வாங்கிய போது அவரிடம் சொத்தை பதிவு செய்து கொள்ள பணம் இல்லாததால் தான் என் அப்பா எனது சித்தப்பாவிற்கு உயில் எழுதி கொடுத்துள்ளார் என்றால் இல்லை. ஆவண எழுத்தரிடம் எனது அப்பாவும் சித்தப்பாவும் சென்றார்கள் என்றும் ஆவண எழுத்தர் சொன்ன யோசனை படி எனது அப்பா கிரய பத்திரத்திற்கு பதிலாக எனது சித்தப்பாவிற்கு உயில் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. 25.12.1997 உயில் பத்திரத்தில் எனது அப்பா அவருக்கு சொந்தமானது பாதி பாகம் என்று குறிப்பிட்டு உயில் எழுதி உள்ளார் என்றால் இல்லை. உயில் ஆவணத்தில் எனது அப்பா அவரது சகோதரருக்கு சொத்தை விற்பனை செய்து பணத்தை பெற்று கொண்டதாக எழுதி உள்ளார் என்றால் இல்லை. தாவா சொத்து எனது அப்பாவின் சுயசம்பாத்திய சொத்து என்பதால் அவருக்கு உயில் எழுத உரிமை உள்ளது என்றும் அதனடிப்படையில் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அவர் உயில் எழுதி கொடுக்கவில்லை. மேற்படி விவரங்களை எனது அப்பா என்னிடம் சொல்லி உள்ளதால் தான் நான் இத்தனை ஆண்டுகளாக பிரதிவாதிகளிடம் பிரச்சனை செய்யவில்லை என்றால் சரியல்ல. என் சித்தப்பா உயிருடன் இருந்த வரை நாங்கள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து எனது அப்பா உயில் எழுதி கொடுத்த பின்பு

நாங்கள் எந்த ஆவணமும் ஏற்படுத்திவில்லை என்றால் எனது அப்பா உயில் எழுதி கொடுக்கவில்லை. எனது அப்பா 1999 ல் இறந்தவிட்டார் அதன் பிறகு எங்களால் 2021 வரை தாவா சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் ஏற்படுத்த முடியவில்லை என்றால் சரிதான். 2021 ல் தான் நாங்கள் பட்டா வாங்கினோம் என்றால் அது எனக்கு தெரியாது. 2021 ல் எனக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி எனது பெயரில் பட்டா வாங்கினேன் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் பட்டாவை எனது பெயரில் மாற்றும் போது சரியான விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. எனது பெயரில் பட்டா ஏற்படுவதற்கு முன்பு எனது அப்பா பெயரில் பட்டா இருந்தது. பிரதிவாதிகள் பெயரில் பட்டா இருந்தது எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் பெயரில் பட்டா இருந்ததால் எனது பெயருக்கு பட்டா மாற்றுதவதற்கு முன்பு பிரதிவாதிகளை விசாரித்து இருக்க வேண்டும் என்றால் அது எனக்கு தெரியாது. நொகனூர் கிராம பட்டா எண்.5640 யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி பட்டா ச.எண்.893/2 பி2 க்கு பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் முத்துராயசாமி சுசிலாம்மா பெயரில் இருந்தது. பட்டா மாற்றம் செய்ய நான் மனு எதுவும் கொடுக்கவில்லை. 30.04.1993 பட்டாவில் நான் வழக்குரையுடன் தாக்கல் செய்தேன். அந்த பட்டா Ex.A6 ல் வெங்கடராமையா மற்றும் சின்னவெங்கடராமையா பெயரில் உள்ளது. சின்னவெங்கடராமையா என்பது எனது சித்தப்பா. சொத்தில் சின்னவெங்கடராமையாவுக்கு பாத்தியம் உள்ளதால் தான் அவரது பெயரில் பட்டா வழங்கி உள்ளார்கள் என்றால் சரியல்ல. உயிலில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் எனது அப்பா உயில் எழுதி கொடுக்கவில்லை. எனது அப்பா உடன் பிறந்தவர்கள் எனது அப்பா, சித்தப்பா, மற்றும் எனது அத்தைகள் 4 பேர். அவர்கள் பெயர் எல்லம்மா, முனிராமக்கா, ராஜம்மா, முனிவெங்கடம்மா. ராஜம்மாவின் கணவர் பெயர் பாப்பிசெட்டி. எனது அப்பா எழுதிய உயிலில் ராஜம்மாவும் அவரது கணவர் பாப்பிசெட்டியும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் இல்லை. உயில் எழுதிய விவரம் அனைவருக்கும் தெரியும் என்றும் வழக்கிற்காக உயில் எழுதவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயில் படியும் கிரயளப் பத்திரப்படியும் 1 ம்

பிரதிவாதி தான் தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்றால் சரியல்ல. உயில் பத்திரத்தில் எனது அப்பா தான் பெங்களூருக்கு குடி செல்வதாக சொல்லி உள்ளார் என்றால் இல்லை அவர் உயில் எழுதவில்லை. எனது தம்பி சுப்ரமணி தேன்கனிக்கோட்டையில் வசிக்கிறார். நானும் மற்ற சகோதரர்களும் பெங்களூரில் வசிக்கிறோம். தாவா சொத்து 1ம் பிரதவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் தாவா சொத்துக்களை பொறுத்து அவர் தானப்பத்திரம் எழுதி உள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவரது மகள்களான 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து முழுவதையும் தானம் கொடுத்துள்ளார் என்றால் பொய்யாக எழுதி உள்ளார். அந்த தானப்பத்திரங்கள் 2008ம் வருடம் எழுதப்பட்டுள்ளது. 2008ல் தானப்பத்திரம் எழுதிய பின்பும் 2021 வரை நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் 2019ல் வில்லங்கம் வாங்கி பார்த்தபோது தான் 2008 தானப்பத்திரங்கள் பற்றி எனக்கு தெரியவந்தது. தாவா சொத்தில் நான் எந்த காலத்திலும் சுவாதினத்தில் இல்லை என்றால் விவசாயம் செய்து கொண்டு இருந்தோம். 2, 3 வருடங்களாக விவசாயம் செய்வதில்லை. நான் சொல்வது தவறு என்றும் நான் சுவானதினத்தில் இல்லை என்றும் 2021ல் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. உயில் எழுதி கொடுத்ததில் இருந்து எனது அப்பாவோ நாங்களோ தாவா சொத்தில் சுவாதினத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை விற்பனை செய்து விட்டு எனது அப்பா பெங்களூருக்கு குடிசென்றுவிட்டார் என்றும் அது பற்றிய விவரம் உயிலில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பா சொத்தை எங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதிகள் பெயரில் உள்ள தானப்பத்திரத்தை அவர்களாக ரத்து செய்ய வேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் அவர்கள் செய்தது சரியல்ல அதனால் ரத்து செய்து கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். பரிகாரத்தில் எந்த ஆவணம், எந்த சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ப்பட்டது என்று நான் தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் அது அவர்கள் தான் செய்து கொடுக்க வேண்டும். தாவா சொத்து பிரதிவாதிகளின் தகப்பனார் கிரயம் பெற்ற சொத்து என்பதாலும் அவர்களுக்கு

அவர்களின் தாயார் தானம் கொடுத்த சொத்து என்பதாலும் தானப்பத்திரத்தை ரத்து செய்ய வேண்டிய அவசியம் பிரதிவாதிகளுக்கு இல்லை என்றால் சரியல்ல. எனது தாவா காலவரையால் பாதிப்பு அடைந்துள்ளது என்றால் சரியல்ல. நான் சமீபத்தில் வாங்கி உள்ள பட்டாவை தவிர மற்ற ஆவணங்கள் நான் தாக்கல் செய்தது பிரதிவாதிகளுடைய ஆவணம் என்றால் அவர்கள் பொய்யாக எழுதி உள்ளார்கள். பட்டாவின் அடிப்படையில் தாவா சொத்து என்னுடையது என்று நான் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. பட்டாவை பிரதிவாதிகளை விசாரணை செய்யாமல் எனக்கு வழங்கி உள்ளதால் எனது பெயரில் ஏற்ப்படுத்தப்பட்டுள்ள பட்டா செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது, மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./–எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**